**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC. No. 481/2020**

**PW - 11**

| | | |
|---|---|---|
| Name | : | பழனியப்பன் ( LW.13 ) |
| Father's / Husband Name | : | த/பெ.முத்துசாமி |
| Village | : | மணப்பள்ளி |
| Taluk | : | மோகனூர் |
| Calling | : | வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் (ஓய்வு) |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.09.2025** என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(2, 3 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 01.15 மணி )**

**முதல் விசாரணை:–**

1) நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில் நேர்முக உதவியாளராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நல்லிபாளையம் காவல் நிலைய போலிசார் குற்ற எண்.374/2018 சட்டப்பிரிவுகள் 379 இதச வழக்கில் தொடர்புடைய TN 30 P 6829 என்ற பதிவுஎண் கொண்ட லாரியின் ஆர்.சி புக்கின் உண்மைநகலுடன் வந்து ஆர்சிபுக்கின் உண்மை தன்மை பற்றி என்னிடம் கேட்டார்கள். என்னுடைய அலுவலகத்தில் உள்ள கம்யூட்டரில் உள்ள ஆவணங்களை ஆய்வு செய்து அந்த வண்டிகுறித்த விவரங்களை வழங்கினேன். என்ன விவரம் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அந்த வண்டியின் ஆர்.சிபுக் ஆனது உண்மை தான் என்று எங்கள் அலுவலகத்தால் சான்று வழங்கப்பட்டது. **மேற்படி ஆவணம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படு**கிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) எனக்கு ஒரு வாகனம் பதிவு செய்யப்படும் போது என்ன நடைமுறைகள் பின்பற்றுவார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நேர்முக உதவியாளரான என்னை தாண்டி தான் பைல்கள் RTO விடம் செல்லும் என்றால் சரிதான். ஆர்.சி.புக் பதிவு செய்ய வேண்டும் என்றால்

அந்த வண்டியில் இன்ஜின் நெம்பம் மற்றும் சேசிஸ் நெம்பர் மீது பிரஸிங் செய்து அந்த பேப்பரில் பெறப்படும் இன்ஜின் நெம்பம் மற்றும் சேசிஸ் நெம்பர் பேப்பரை ஆர்சிபுத்தகத்தில் ஒப்பட்டப்டும் எனற்ால் சரிதான். மேற்சொன்ன நடைமுறையை மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்கொள்வார் என்றால் சரிதான். மேற்சொன்ன நடைமுறையை முழுமையாக முடித்து அவரால் கையெழுத்து செய்யப்பட்டு ஆர்.சி.புத்தகத்தில் ஒட்டப்பட்டு பைல்கள் என்னிடம் கொடுக்கப்பட்டு என் மூலம் RTO விடம் செல்லும் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிடக்கூடிய பைல்களில் உள்ள இன்ஜின் நெம்பம் மற்றும் சேசிஸ் நெம்பரை தான் கம்யூட்டரில் பதிவு செய்து வண்டி குறித்த விவரத்தை பதிவு செய்வோம் என்றால் சரிதான்.

3) அதன் பின்னிட்டு தான் வாகனத்திற்கு பதிவு எண் கொடுக்கப்படும் என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் TN 30 P 6829 எந்த விதமான பெயர் மாற்றமோ, அல்லது வாகனத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்தாலோ Hypothication செய்தாலோ, முதன் முதலில் பதிவு செய்த சேலம், மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பின்பு தான் நடைமுறைக்கு வரும் என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கு வாகனம் குறித்து காவல் துறையினர் விவரங்களை என்னிடம் கேட்டபோது கணியில் பரிசீலனை செய்து என்னிடம் காட்டப்பட்ட ஆவணம் அசல் ஆவணம் என்று சொல்லி தான் அ.சா.ஆ.9 சான்றிதழ் வழங்கினே் என்றுசொன்னால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 01.31 மணி**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையொப்பம் செய்தார்.

ஒம்/–கா.செகனாஸ்பானு
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.